நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

சுற்றறிக்கை

ந. க.எண். 16729/2008/L2 நாள். 20. 02. 2009

பொருள்: ஓய்வூதியம் – மாநகராட்சிகள் / நகராட்சிகள்–ஓய்வுபெற்ற அலுவலர்கள்/பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய சேமநல நிதி நிலுவை மற்றும் சிறப்பு சேமநலநிதி, வட்டிகள்– பழைய ஊதியக் குழு நிலுவைத் தொகை வழங்கப்படாதது குறித்து சில அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

பார்வை:
1) இவ்வலுவலக சுற்றறிக்கை எண். 9019/08/எல்3, நாள் 29.02.2008
2) இவ்வலுவலக சுற்றறிக்கை 16729/08/எல்3, நாள்.10.04.2008

***

பார்வையில் காணும் இவ்வலுவலக சுற்றறிக்கைகளில் மாநகராட்சி / நகராட்சிகளிலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர்கள் / பணியாளர்களுக்கு சேமநலநிதி அதன் வட்டியுடன், சிறப்பு சேமநலநிதி அதன் வட்டியுடன் வழங்கப்படவேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து மண்டல இயக்குநர்களும் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் மதிப்புரை (Review) செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

2. மேற்காணும் அறிவுரைகள் வழங்கப்பட்டு இருந்தாலும், பல ஓய்வூதியதாரர்கள் நிலுவை தொகை வழங்கப்படவில்லை என்று மனுக்கள் எழுப்பியவண்ணம் உள்ளனர். எனவே, இச்சுற்றறிக்கை கிடைக்கப்பெற்று 31.03.2009 தேதிக்குள் அனைத்து நிலுவை தொகை வழங்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. வட்டி கணக்கிடப்பட்டு தணிக்கைத்துறையின் சான்று விரைவில் பெறப்படவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, தொகை வழங்குவதில் காலதாமதம் முழுவதுமாகத் தவிர்க்கப்படவேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

3. மேற்காணும் பொருள் குறித்து மேலும் காலதாமதம் செய்யும் அலுவலர்கள் மீது உரிய விதிமுறைகளின்படி தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஒம்/–ப.செந்தில்குமார்,
நகராட்சி நிர்வாக இயக்குநர்

பெறுநர்
ஆணையர்கள்
அனைத்து மாநகராட்சிகள் / நகராட்சிகள்.
செயல் அலுவலர்கள்,
மூன்றாம் நிலை நகராட்சிகள்,
அனைத்து மண்டல இயக்குநர்கள்.
இருப்பு கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்